OS 30/2023

பி.வா.சா.1 பரமேஸ்வரி க/பெ அருணகிரி

நாள் 24.07.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது தகப்பனார் பெயர் டி.ஆறுமுகம் ஆகும். எனது தகப்பனார் ஆறுமுகத்திற்கு குடும்ப சொத்தாக அசையும் மற்றும் அசையா சொத்துகள் என்ன இருந்தது என்றால் வீடு, நிலம், நகைகள், ஜெராக்ஸ் மெஷின் இருக்கிறது. என்னுடைய பதிலுரையில் அசையும் சொத்தாக நகைகள், ஜெராக்ஸ் மெஷின் இருப்பதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ஜெராக்ஸ் மெஷின் சொல்லவில்லை. குறிப்பாக என்ன என்ன நகைகள் எவ்வளவு சவரன் என்ற விவரம் பதிலுரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. ஒரு வீடு நான் அனுபவித்து வருகிறேன். இன்னும் இரண்டு வீடுகள் உள்ளது. அதனை குகன் மற்றும் பாலமுருகன் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நிலத்தை பயிர் செய்வது பாலமுருகன் அதில் வருவது நால்வரும் எடுத்துக்கொள்கின்றனர். நிலம் எவ்வளவு இருக்கிறது என்றால் 4 முதல் 4 1/2 ஏக்கர் இருக்கும். நான் எனது நகைகளை எனது அப்பா பெயரில் கே.வி.பி பேங்கில் வைத்து பணம் வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை.

2. பாலமுருகன் மற்றும் குகன் ஆகியோர் எனது அப்பா பெயரில் நகையை அடமானம் வைத்து பணம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் இல்லை. பாலமுருகனும் குகனும் எனது அப்பா பெயரில் பேங்கில் நகையை அடமானம் வைத்ததாக நோட்டிஸ் வந்திருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. குடும்ப நகை என்ன என்ன நகை என்று என்னுடைய பதில் அறிவிப்பிலும் எதிர்வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிக்கு திருமணம் செய்யும் போது எனது தாயார் அமிர்த அம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். வாதிக்கு காதல் திருமணம் என்றாலும் பின்னர் வீட்டில் சமரசம் செய்து திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் கௌரிக்கு திருமணம் செய்தது போக மீதம் இருந்த நகைகளை வாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. எனது தாயார் என்ன என்ன நகைகளை வைத்திருந்தார்கள் என்றால் கல் வைத்த அட்டிகை, 2 சவரன் செயின் மற்றும் 10 சவரன் செயின், மோதிரம் 2, கல் வைத்த வங்கி மோதிரம், ஆண்கள் அணியும் 10 மோதிரம், மற்றும் 5 சவரன் செயின், கல் வைத்த வளையல் வைத்திருந்தார்கள்.

3. எனக்கு திருமணம் ஆகும் போது எனது அம்மா உயிருடன் தான் இருந்தார். பெரிய மகளுக்கு 10 சவரன், 2வது மகளுக்கு 10 சவரன் எனக்கும் நகைகள் போட்டு திருமணம் செய்தார்கள் என்றாலும் நான் மேலே சொன்ன நகைகள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. கௌரி மற்றும் காமாட்சி ஆசிரியர் வேலை பார்க்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் கணவர்கள் ஒருவர் வழக்கறிஞராகவும் மற்றொருவர் ஆசிரியராகவும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இரண்டு வழக்குகளின் வாதிகள் இருவருக்கும் நல்ல வருமானம் இருக்கிறது என்றால் சரிதான். அவர்கள் மகன் மற்றும் மகள்கள் நன்றாக படித்து டாக்டராகவும், இன்ஜினியராகவும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் நல்ல வருமானம் என்றால் இருக்கும். நான் குடியிருக்கும் வீட்டில் முன்பக்கம் கடை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நிலத்திற்கான பத்திரங்கள் அனைத்தும் எனது அண்ணன் தம்பி வீட்டில் இருக்கிறது என்றால் இல்லை காமாட்சி வீட்டில் இருக்கிறது.

4. காமாட்சி வீட்டில் எந்த விதமான சொத்து ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. வாதி காமாட்சி மற்றும் வாதி கௌரி எனது அப்பா பெயரில் வங்கியில் அவர்களுடைய நகை அடகு வைத்த அடகு ரசீது அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்றால் அப்பா இறந்த பிறகு பீரோவை வாதி காமாட்சி, வாதி கௌரி, பாலன் மற்றும் பாலன் மனைவி பீரோவை திறந்து பார்த்தார்கள். அப்போது அவர்கள் அடகு ரசீதுகளை எடுத்து சென்றிருக்கலாம். பீரோவை திறந்து பார்த்தது, ரசீதுகளை எடுத்து சென்றதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பீரோவை திறந்து பார்த்தது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சொத்துகளை பாகம் பிரித்து கொடுக்கும் படி குகன், பாலமுருகனிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. பிரச்சனை ஏற்பட்ட பிறகு பாகம் இருப்பதாக சொன்னேன். பிரச்சனை என்ன என்றால் பொதுவான சொத்தான வீட்டில் நான் இருக்க கூடாது என்று பிரச்சனை செய்தார்கள். அப்போது பாகத்தை பிரித்து கொடுக்கும் படி கேட்டேன். 2019ல் கேட்டேன். பாகப்பிரிவினை கேட்டு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

5. வாதி காமாட்சி, வாதி கௌரி இருவரும் பாலமுருகன் மற்றும் குகனிடம் சொத்தை பிரித்து கொடுக்கும் படி கேட்டார்கள் என்றால் இல்லை. நான் சரிசமமாக பாகம் பிரிக்க ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், வீடு மற்றும் சொத்து அதிகம் கொடுக்கும் படி நான் கேட்டேனா என்றால் இல்லை. எனக்கு வருமானம் இல்லை, எனது கணவர் உடல் நிலை சரியில்லை, அவர் ஏழை என்பதால் கூடுதலாக சொத்து கொடுக்கும் படி தகராறு செய்தேன் என்றால் இல்லை. பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு போட்டால் என்னுடைய பங்கு குறைந்துவிடும் என்பதால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்த பிறகு வாதி காமாட்சி, வாதி கௌரி வங்கியில் வைத்த நகைகளுக்கான பணத்தை செலுத்திவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. யார் பணம் கட்டினார்கள் என்றும் தெரியாது என்றால் சரிதான். வாதி காமாட்சியும் வாதி கௌரியும் அவரவர் நகைக்குண்டான பணத்தை அப்பா இறந்த பிறகு கட்டினார்கள் என்றால் தெரியாது. பணம் கட்டிய ரசீதை வழக்கில் தாக்கல் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை.

6. அடகு வைத்த ரசீகளை வாதிகள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் இல்லை. அடகு வைத்த ரசீது மற்றும் பணம் செலுத்திய ரசீதுகளையும் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக இல்லை என்றும் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. IOB வங்கியில் நகையை அவர்களுக்கு கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று நானும் வாதி காமாட்சி, வாதி கௌரி மற்றும் பாலமுருகன் எழுதி கொடுத்து இருக்கிறோம் என்றால் இல்லை. நான் அதுபோல் எழுதி கொடுத்து விட்டு இல்லை என்று தற்போது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)